# அமெரிக்க அதிபர் பைடனுடன் பிரதமர் மோடி சந்திப்பு

செப்டம்பர் 09, 2023

பிரதமர் திரு நரேந்திர மோடியை அமெரிக்க அதிபர் திரு ஜோ பைடன் ஜனாதிபதி சந்தித்தார். அமெரிக்க அதிபர் என்ற முறையில் முதன்முறையாக இந்தியாவிற்கு வந்துள்ள பைடன், செப்டம்பர் 9, 10 ஆகிய தேதிகளில் புது தில்லியில் நடைபெறும் ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

பகிரப்பட்ட ஜனநாயக விழுமியங்கள், மூலோபாய ஒருங்கிணைப்புகள் மற்றும் வலுவான, மக்களிடையேயான உறவுகளை அடிப்படையாகக் கொண்ட இந்தியா-அமெரிக்க விரிவான உலகளாவிய மூலோபாய கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதற்கான அதிபர் பைடனின் தொலைநோக்கு மற்றும் அர்ப்பணிப்புக்கு பிரதமர் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

முக்கிய மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத்திற்கான முன்முயற்சி (ஐ.சி.இ.டி) உட்பட, ஜூன் 2023 இல் பிரதமரின் வரலாற்று சிறப்புமிக்க அமெரிக்க அரசு முறைப் பயணத்தின் எதிர்கால மற்றும் பரந்த அளவிலான விளைவுகளை செயல்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை இரு தலைவர்களும் பாராட்டினர்.

பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு, கல்வி, சுகாதாரம், ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு, கலாச்சாரம் மற்றும் மக்களிடையேயான உறவுகள் உள்ளிட்ட இருதரப்பு ஒத்துழைப்பில் நீடித்த வேகத்தை தலைவர்கள் வரவேற்றனர்.

சந்திரனின் தென் துருவத்திற்கு அருகே சந்திரயான்-3 ஐ தரையிறக்கிய வரலாற்று சிறப்புமிக்க சாதனைக்கு பிரதமர் மற்றும் இந்திய மக்களுக்கு அதிபர் பைடன் வாழ்த்து தெரிவித்தார் மற்றும் விண்வெளியில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான ஒத்துழைப்பை எடுத்துரைத்தார்.

இரு தலைவர்களும் பல பிராந்திய மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் குறித்தும் கருத்துகளை பரிமாறிக் கொண்டனர். இந்தியா-அமெரிக்க கூட்டாண்மை இரு நாட்டு மக்களுக்கு மட்டுமின்றி உலக நலனுக்கும் நன்மை பயக்கும் என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இந்தியாவின் ஜி20 தலைமையின் வெற்றியை உறுதி செய்வதற்காக அமெரிக்காவிடமிருந்து கிடைத்த நிலையான ஆதரவிற்காக பிரதமர் மோடி பைடனுக்கு நன்றி தெரிவித்தார்.

**புது தில்லி**
**செப்டம்பர் 09, 2023**